★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

லர் 25 | ஆடி 18 | ஷவ்வா 23 | இதழ் 171

யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 3—8—83

★ தடை செய்யப்பட்ட கட்சிகளில்

அங்கத்தவர்களாக இருப்பவரின்

## சொத்துக்கள் பறிமுதலாகும்

(கொழும்பு)

பிரிவினை தடைச்சட்டம், வியாழனன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படும். அரசியல் சாசனத்தில் 6வது திருத்தச் சட்டமாக இது அமையும்.

திருத்தச்சட்டமூலம் அமுலுக்கு வந்ததும் இக்கட்சிகளில் அங்கத்தவர்களாகதொடர்ந்து இருக்கும் சகலரும், குடியுரிமை இழப்பு, சொத்துக்கள் பறிமுதல், ஆயுள்கால சிறைத் தண்டனை, மரணதண்டனை ஆகியவற்றுக்கு உள்ளாவார்கள்.

இக்கட்சிகளின் மீதான தடை உத்தரவு பின்வரும் விபரங்களை கொண்டிருக்கும்.

இக்கட்சிகளின் அன்றுட நடவடிக்கைகள் அனைத்தும் தடை செய்யப்பட்டிருக்கும். இக்கட்சியின் அங்கத்தவர்கள் கூட்டங்களையோ வகுப்புகளையோ நடத்த முடியாது. கட்சியின் அங்கத்தவர்களாக இருப்பதால், பின்பற்றி நடக்க வேண்டிய கட்சியின் எவ்வித உத்தரவுகளையும் பின்பற்றி நடக்கமுடியாது.

ராஜாங்க அமைச்சர் வெளியிட்ட விசேட அறிக்கையில் பிரிவினை கோரும் சகல கட்சிகளும் சதாகாலமும் தடை செய்யப்படும். இதற்கு அரசியல் சாசன திருத்தசட்டமூலம் ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படுமென்று கூறப்பட்டுள்ளது. (க)

# கப்பல்களில் அகதிகள்

# வந்து சேருகின்றனர்!

## அவரவர் இடங்களில் சேர்க்கப்படுகின்றனர்!!

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் காங்கேசன்துறை வந்து சேர்ந்த முதலாவது கப்பல் அகதிகள் யாழ்ப்பாணத்திலுள்ள அவரவர் சொந்த இடங்களில் சேர்க்கப்பட்டனர். நூற்றுக்குமேற்பட்ட தாய்மார்கள்,கைக்குழந்தைகளுடன் இக்கப்பலில் கூடுதலாக வந்திருந்தனர் இந்தக்கப்பலில்354 பேர்வந்தனர். 1400 பேருடன்வரும் இரண்டாவதுகப்பலும் நேற்று வந்துசேர்ந்தது.

கொழும்பில் முகாம்களில் இருக்கும் அகதிகள் கப்பல்களில் அனுப்பிவைக்கப்படுகின்றனர். மேலும் இன்று மற்றுமொரு கப்பல் அகதிகளை ஏற்றிக்கொண்டு இங்கு புறப்படுமெனத்தெரியவருகிறது.

நேற்று முன்தினம் பிற்பகல் வந்து சேர்ந்த கப்பலில் 354 பேர் காங்கேசன் லங்கா சிமெந்து துறைமுகம் வந்து சேர்ந்தனர். இவர்கள் இரத்மலானை முகாமைச் சேர்ந்தவர்கள். இவர்களைபஸ்களில் அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகளை யாழ் அரசாங்ச

(4-ம் பக்கம் பார்க்க)

சீனியை

### நேரடியாகப் பெறலாம்

(கொழும்பு)

கந்தளாய் இங்குருன சீனித் தொழிற்சாலைகளிலிருந்து சீனியை வர்த்தகர்கள் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

### செய்தித் தணிக்கை அமுல்

கடந்த புதன்கிழமை 20ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

### கொழும்பில் காய்கறிகள் விலையிறக்கம்

(கொழும்பு)

கொழும்பில் மீண்டும் காய்கறிகள் விலை இறங்கியுள்ளது. இரு தினங்களுக்குமுன் கொழும்பில் காய்கறிகளின் விலை திடீரென அதிகரித்தது. மலைநாட்டிலிருந்து லொறிகள் மூலம் காய்ககறிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து விலைகள் இறங்கியுள்ளது. (க)

சில மாவட்டங்களுக்கு

## இணைப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்!

(கொழும்பு)

சில மாவட்டங்களுக்கு இணைப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவசர காலச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப்பயன்படுத்தி ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன இவர்களை நியமித்துள்ளார்.

இணைப்பு அதிகாரிகளின் பெயர் விபரங்கள் வருமாறு:

கண்டி:- திரு. எ. டி. தபிடுபொல, மாத்தளை:- திரு. எச். என். தென்னக்கோன், நுவரேலியா:- பி ஏ. என். ஜே. பி. குமார், இரத்தினபுரி:- பிரிகேடியர் எஸ். பி. என். அப்புகொல, மாத்தறை:- ஏ. ஈ. ரி. அபயசிங்கா, பதுளை;- கேர்ணல் ஜே.ஐ.பி. எஸ், ஜெயரத்ன, களுத்துறை:- கேர்ணல் சி. டபிள்யூ பாணபொக்க, காலி:- எஸ். எம். ஏ. ஜெயவர்த்தன, அனுராதபுரம்:- கேர்ணல் எம். எச். குணவர்த்தன, கேகாலை, லெப்டினன்ட் கேர்ணல் ரி. ஆர். பி. ஜெயதுங்க, அம்பாந்தோட்டை:- கேர்ணல் எச். ஏ. பி. சில்வா, திருகோணமலை: காப்டன் எம். மார்சல், கொழும்பு விமான நிலையமும் நிறைவேற்று ஊக்குவிப்பு வலயமும் பிரிகேடியர் எச். சி. ரணதுங்கா. (க)

## "இலங்கையின் உள்நாட்டுப் பிரச்னையில் இந்தியா தலையிடக்கூடாது" — தேசாய்

(கொழும்பு)

தமிழருக்கு அநீதி விளைவிக்கப்படுவதைத் தடுக்கமட்டுமே இந்தியா அதன் செல்வாக்கைப் பிரயோகிக்கலாம் என்றும் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்னையில் இந்தியா தலையிடக்கூடாது என்று முன்னுள் இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தெரிவித்துள்ளார். (க)

## மாத்தளை புனர்வாழ்வு நிலையத்தில் 8000 அகதிகள்!

(கொழும்பு)

மாத்தளை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு நிலையங்களில் 8000பேர் வரை அகதிகளாக இருக்கின்றுர். இவர்களுக்கான உணவு மற்றும் இதர வசதிகளை சமூக சேவைகள் திணைக்களம் மேற்கொண்டுவருகிறது.

இதேவேளை இம்மாவட்டத்தில் பூரண அமைதி நிலவுகிறதென்றும் பொதுச்சேவைகள் வழமையாக இயங்குகின்றன. என்றும் இம்மாவட்டத்துக்குப் பொறுப்பான இணைப்பு அதிகாரி தெரிவித்துள்ளார். (சூ)

## கண்டி முகாம்களில் 12,000 அகதிகள்

### பேராதனைப் பல்கலைக் கழகத்தில் 7500 பேர்!

(கண்டி)

கண்டி மாவட்டத்தில் அமைக்கப்பட்ட அகதிகள் முகாம்களில் மொத்தம் 12000 அகதிகள் வரை இருக்கின்றுர்கள் இதில் பேராதனைப் பல்கலைக்கழக அகதி முகாமில் மட்டும் 7500 பேர் உள்ளார்கள்.

இவர்களுக்கான உணவு மற்றும் இதர வசதிகளை கண்டி மாவட்ட இணைப்பு அதிகாரி திரு. லமுனு பொல இங்குள்ள தொண்டர் ஸ்தாபனங்களின் உதவியுடன் மேற்க்கொண்டு வருகின்றுர், (சூ)

கொழும்பு, காலி, திருமலை

துறைமுகங்களில் ஊழியர்

## இரவு பகலாக வேலை!

(கொழும்பு)

கொழும்பு, காலி, திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் ஊழியர்கள் இரவு பகலாக வேலைசெய்யவரும்படி அழைக்கப்பட்டார்கள். இங்கு 24 மணி நேரமும் பொருட்களை இறக்கும் வேலை நடைபெறுகிறது.

வெளிநாடுகளிலிருந்து வரும் பொருட்களை மிக விரைவில் இறக்கி மக்களுக்கு விநியோகம் செய்யவேண்டுமென்ற நோக்கில் துறைமுக அதிகாரிகள் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்கள்.

அரிசி, மா, சீனி, மீன்டின் என்பன இத்துறைமுகங்களில் பெருமளவு இறக்கப்படுகின்றன. (சூ)

### லொறிகள் தேவைப்படுகிறது

(கொழும்பு)

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு பொருட்களை விநியோகம் செய்ய லொறிகள் தேவைப்படுகிறது. வாடகைக்கு விடவிரும்புவோர் விற்பனை நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

### குருப்பட்ட அறிவித்தல்

இன்று (3-8-83) புலோலி புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெறவிருந்த அருட்சகோதரன் அலோசியஸ், ரூேய், அ. ம. தி. அவர்களின் குருத்துவத் திருநிலைப்படுத்தல் வைபவம் தவிர்க்கமுடியாத காரணங்களிஞல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். (8105)

## சிறு விளம்பரம்

### தேவை

க. பொ. த. (உ. த) I. A. B. (Final) வயது 29. 5 வருட அனுபவம் (Book Keeper) ஆண். தகமைக்கேற்ற தொழிலை எதிர்பார்க்கிறார். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8100, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 8100

### தவறிவிட்டது

யமஹா மோட்டர் சைக்கிள் திறப்புகள் (2) திங்கட்கிழமை (25-7-83) அன்று மந்திகை சந்திக்கும் பருத்தித்துறை ரவுணுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து மந்திகை அரசினர் வைத்தியசாலை O. P. D.யில் Dr. திருமதி விவேகானந்தனிடம் ஒப்படைக்கவும். 8103


## ஊரடங்கில் இரத்ததானம்

[கொழும்பு]

வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசரமாக இரத்தம் தேவை என விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று கடந்த சனியும், ஞாயிறும் 200 பேர் கொழும்பு ஆஸ்பத்திரியில் இரத்ததானம் வழங்கினர்.

கடந்த வெள்ளி 20பேர் மட்டுமே இரத்ததானம் வழங்கியிருந்தனர். இந்த வேண்டுகோளின்பின்னர், ஊரடங்கு நேரம் என்றும் பாராமல் சனியும், ஞாயிறும் 200 பேர் இரத்ததானம் வழங்கினர்கள்.

சுகாதார அமைச்சர் இவர்களுக்கு நன்றி தெரிவித்தார். [க]


## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# தோட்டத் தொழிலாளருக்கு உணவுவிநியோகம் நேரடியாக கண்காணிக்கப் பணிப்பு!

(கொழும்பு)

களுத்துறை மாவட்டத்தில் உணவு விநியோகம், அத்தியாவசிய சேவைகள் பற்றி ஆராய நேற்றுமுன்தினம் களுத்துறைக் கச்சேரியில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது.

நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில், பல பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டார்கள்.

பெருந்தோட்டப் பகுதிகளில் வேலைகள் தடையின்றி நடைபெற இந்தியத் தோட்டத் தொழிலாளிகளையும், அயலிலுள்ள கிராமவாசிகளையும் விசேடமாக வேண்டிக்கொள்வதென அங்கு தீர்மானிக்கப்பட்டது,

களுத்துறை மாவட்டத்தில் சகல கூட்டுறவுச் சங்கங்களும் இன்றும் நாளையும் திறந்திருக்கும் தோட்டத்தொழிலாளர்களுக்கு உணவு விநியோகிப்பதை நேரடியாகக் கவனிக்கும்படி தோட்ட நிர்வாக அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர். (க)

## வேலைக்குவர அழைப்பு

(கொழும்பு)

தொலை தொடர்பு திணைக்களத்தின் ஊழியர் அனைவரும் உடனடியாக வேலைக்குவரும்படி அழைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் ஊரடங்குச் சட்டநேரத்தில் பயணம்செய்யும் பத்திரத்தைப் பொலிஸ் நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## திங்கள் விடுமுறை

(கொழும்பு)

நேற்றுமுன்தினம்திங்கட்கிழமை பொது விடுமுறை என அறிவிக்கப்பட்டதால் அரசாங்க கூட்டுஸ்தாபனங்கள் மூடப்பட்டிருந்தது.

## கொழும்பில் மக்கள் 'கியூவில்' நின்று பொருட்களை வாங்கினர்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று மக்கள் கியூ வரிசையில்நின்று போட்டிபோட்டுக்கொண்டு பொருட்களை வாங்கினர்.

உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லாதபோதும் 2மணி உரடங்குச் சட்ட நேரத்துக்குமுன் பொருட்களை வாங்கவேண்டுமென்பதினாலேயே கியுவரிசை காணப்பட்டது.

இதேவேளை ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. டக்ளஸ் லியனகே விடுத்துள்ள அறிக்கையில் நாட்டில் உணவுப் பொருட்கள் போதியளவு காணப்படுகின்றபோதும் அவற்றை விநியோகிப்பதில் குறைபாடு காணப்படுவதினால் பொருட்களுக்கு தட்டுப்பாடு கொழும்பில் காணப்படுகிறது என்று தெரிவித்தார். சில வர்த்தகர்களும் பொருட்களைப் பதுக்கி வைத்திருக்கின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

நேற்று கொழும்பு மாநகரில் பெற்ரோல் பெறுவதற்கு கியூ வரிசை இருக்கவில்லை. (சூ)

## பின்னுறுதிக்கட்டளைபற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனமின்றி இறந்துபோன தெல்லிப்பழை வடமேற்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சக்கரவர்த்தி ஆனந்ததுரையின் மரணசாதனமற்ற மரணச்சொத்துக்கள் சம்பந்தமான விடயத்திலும்

—மரணமெய்தியவர்

அத்துடன்

குறித்த சங்கரப்பிள்ளை சக்கரவர்த்தி ஆனந்ததுரையின் மரணசாதனமற்ற மரணச்சொத்துக்களின் தத்துவகாரியாக நியமிக்கப்பட்டு தற்போது இறந்துபோன சங்கரப்பிள்ளை சக்கரவர்த்தி ஆனந்ததுரை கைம்பெண் கமலாம்பிகை இறந்துவிட்டபடியால் அவரின் இடத்துக்கு குறித்த ஆனந்ததுரையின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்களுக்கு தத்துவகாரனக தன்னை நியமிக்குமாறு ஆனந்ததுரை கார்த்தவீரியன் என்பவர் சிவில் நடைமுறைச் சட்டத்தின் 549ம் பிரிவின் பிரமாணங்களுக்கு அமைய செய்துகொண்ட விண்ணப்பம் சம்பந்தப்பட்ட விடயத்திலும்

மரணச்சொத்து நியாயாதிக்கம் இல. 180

ஆனந்ததுரை கார்த்தவீரியன், தெல்லிப்பழை

மனுதார்

மேற்படி இலக்கங்கொண்ட மரணச்சொத்து வழக்கில் தத்துவகாரியாக இருந்தவரான ஆனந்ததுரை கைம்பெண் கமலாம்பிகை இறந்துவிட்டார். ஆகையால் அவரின் இடத்துக்கு தன்னை மேற்சொல்லப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனமற்ற மரணச்சொத்துக்களின் தத்துவகாரனக நியமிக்குமாறு மேற்படி மனுதார் இந்நீதிமன்றத்தில் விண்ணப்பம் தாக்கல்செய்து அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது. அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1983ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இந்நீதிமன்றத்தில் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு ஏதும் எதிர்க்காரணம் இருப்பின் தெரிவிக்குமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறார்கள்.

தயாரித்தது
ஆ. வ. சதாசிவம் (ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி

1983ம் ஆண்டு ஜூன் மாதம் 2ந் திகதி
நீதிமன்றக்கட்டளைப்படி
ஒப்பம் ஆ. சிவபாதசுந்தரம்
பதிவாளர்

ஆ. வ. சதாசிவம்
சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்,
காங்கேசன்துறை. 8102

## ஊரடங்குச் சட்டநேரத்தில் பல நோ. கூ. சங்கங்கள் திறக்கப்படக் கூடாது!

(கொழும்பு)

கொழும்பில் ஆயுதப்படையினர், சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்டிவருகிறார்கள்.

கொழும்பு நகரில் கடந்த வெள்ளிக்கிழமை 5 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம், தொடர்ந்து சனி, ஞாயிறு முழுநாளும் அமுலில் இருந்து திங்கட்கிழமை காலை 4-30 மணிக்கு தளர்த்தப்பட்டது. மீண்டும் திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு ஊரடங்கு கொழும்பில் அமுலுக்கு வந்தது.

அகதிகள் முகாம்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அகதிகளில் பலர், கப்பல்கள் மூலம் யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருக்கின்றனர்.

ஆயுதப்படையினரும், பொலிசாரும்வீதிகளில்ரோந்து சுற்றிவருகின்றனர். ஊரடங்கு நேரத்தில், எவரும் வெளியில் வரவேண்டாமென்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

ப. நோ. கூ. சங்கங்கள் ஊரடங்கு நேரத்தில் திறந்திருக்க கூடாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நாடு முழுவதும், அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டது. அத்தியாவசியசேவை ஊழியர்கள் கட்டாயமாக சேவைக்கு வரவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களின் லீவுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. (க)

## தோட்டப்பகுதி நிலைமை

(கொழும்பு)

தோட்டப்பகுதியில் நேற்று முன்தினம் வரை 492 அசம்பாவிதச்சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாக ராஜாங்க அமைச்சின் செயலாளர்தெரிவித்தார். நுவரெலியா மாநகரில் சில இடம்பெற்றதைவிட தோட்டங்களில் நேற்று முன்தினம் எதுவிதச்சம்பவமும் நிகழவில்லையென்றார் அவர்.

அசம்பாவிதங்களில் தோட்டப்பகுதியைப் பொறுத்தளவு உயிர்ப்பலி எதுவும் நடைபெற்றதாகத்தகவல் இல்லையென்று அவர் கூறினார். [இ]

## வேலைக்குத் திரும்பினர்

(களுத்துறை)

களுத்துறை மாவட்டத்தில் 85 சதவீதமான தோட்டத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியுள்ளனர். (க)

## அரியாலை ஸ்ரீ பார்வதிக்கு புதிய அதிபர்

(யாழ்ப்பாணம்)

சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலைக்குப் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். சமய சமூகத் தொண்டரான இவர் சைவப் புலவர் சங்கம், சைவநெறித் தொண்டர் கழகம், இலங்கை வித்தியாலய அதிபர் சங்கம், என்பவற்றின் பொருளாளரும் கொக்குவில் கிருபாகரசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பரிபாலனசபைச் செயலாளருமாவார். இவர் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் அதிபராகவிருந்து அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலைக்கு அதிபராக மாற்றம் செய்யப்பட்டுத் தமது கடமையை இம்மாதம் 18-ந் திகதி தொடக்கம் ஏற்றுள், ளார், முன்னாள் அதிபர் க. சின்னையா ஓய்வு பெற்றுள்ளார், (வி)


## யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

# குரொஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.

### 05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA) போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)

கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள் மற்றும் பிரயாண ஒழுங்குகள் எதுவாலும் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

CROSS TRAVEL SERVICES (PVT) LTD.

Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair

Stage II Modern Market Ist Floor
BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

# ★ "வன்செயலைப் புரிந்தவர்கள் பெயர்ப் பட்டியலுடன் சென்று தாக்குதல் நடத்தினர்கள்!

## சகல இடங்களிலும் ஒரே மாதிரி தீ வைப்பு!"

### தொலைக்காட்சி, வானெலியில் அமைச்சர் அல்விஸ்

(கொழும்பு)

இனங்களுக்கிடையே குழப்பங்களை ஏற்படுத்தி அதன் மூலம் அரசைக்கவிழ்க்கும் முயற்சிக்கு சில பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஆலோசனை கூறியுள்ளனர். இவர்களுக்கு பக்கத்துணையாக இருந்தது சில வெளிநாட்டு சக்திகள், உள்நாட்டு அரசியல் கட்சிகளின் உதவியுடன் செயல்பட்டனர். சில கட்சிகள் வடபகுதி பயங்கரவாதிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தின. இரகசிய கூட்டங்களை நடத்தினர். ஒருவருக்கொருவர் ஆதரவளிக்க திட்டங்களை தீட்டினர். பயங்கரவாத பாதையில் செயல்பட ஒத்துழைத்தனர். இவர்கள் பாதைகள் வெவ்வேருக இருக்கலாம். பயணங் மாறுபட்டதாக இருக்கலாம். ஆனுல் நோக்கங்கள் ஒன்ருகத் தான் இருந்தது.

ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் வானெலி மூலமும் தொலைக்காட்சி மூலமும் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் அச்செய்தியில் மேலும் கூறியதாவது: வன்செயல்களின் நம் நாட்டிற்கு அளவிடமுடியாத சேதம் ஏற்பட்டிருப்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இதனுல் தமது வேலைகளை இழந்தவர்கள் இப்பொழுது உணரத்தொடங்கி விட்டார்கள். சில கடைகளில் இரண்டு மூன்றுபேர் வேலை செய்தார்கள் சில ஸ்தாபனங்களில் இருபது முப்பது பேர் வேலைசெய்தார்கள், தொழிற்சாலைகளில் ஆயிரணக்கணக்கானேர் வேலை செய்தார்கள். தொழில் நிலையங்களில் வேலை செய்தோர் 90 சத விதமானேர் சிங்களவரே. இந்தச் சீரழிவு பற்றி இங்கு நான் அதிகம் பேசவிரும்பவில்லை. இதனை விட ஆபத்தான நிலைமை பற்றியே இப்பொழுது உங்களுக்கு கூறவிரும்புகிறேன். நம் நாட்டில் இன்று ஏற்பட்டிருப்பது வெறும் தமிழர் சிங்களவர் கலகமல்ல. இது அதைவிட மோசமானது. மக்களின் ஒரு சாராரை மறு சாராருக்கு எதிராக தூண்டிவிட்டு நாட்டில் குழப்பநிலையைத் தோற்றுவித்து அதன் மூலம் அரசாங்கத்தை பதவியிலிருந்து கவிழ்பதற்கான முயற்சியே இது வாகும்.

நீங்கள் அறிந்த உண்மை விஷயங்களை சற்று நோக்கிப் பாருங்கள். எங்கெல்லாம் வன்செயல்கள் இடம்பெற்றனவோ அங்கெல்லாம் வன்செயல்கள் ஒரேமாதிரியான முறையில் ஒரே திட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜனுதிபதியும் நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரையிலே இதனைப்பற்றி அதாவது வன்முறைகளுக் கிடையிலான முறைபற்றி எடுத்துக்கூறியுள்ளார்.

இவைகளின் பின்னணியில் தலைவர்கள் இல்லாவிட்டால் இது நடப்பதெப்படி? முன்கூட்டியே திட்டமிடுதல் ஒவ்வொரு கோஷ்டியும் இன்னின்ன செய்ய வேண்டும் என்ற அறிவுறுத்தல்கள். நீங்களே பார்த்திருப்பீர்கள் எவ்வாறு திட்டமிட்டு வன்செயல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதனை பட்டியல் ஒன்றினை வைத்துப்பார்த்துப் பார்த்து தாக்கினுர்கள்.

காடையர்கள் வீடுகளுக்கும், கடைகளுக்கும் சென்று அங்குள்ளவர்களை வெளியேற்றி விட்டு பொருட்களை வெளியே கொண்டு வந்துபோட்டு தீ வைத்தார்கள். பின்னர் கட்டங்களுக்கும், வீடுகளுக்கும் தீ வைத்தார்கள். இதேமாதிரித்தான் எல்லா இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டன.

அவ்வப்பகுதியைச் சேர்ந்த மக்களாலேயே இது பெரும்பாலும் மேற்கொள்ளப்பட்டது. வன்செயல்களைப் புரிந்தவர்கள் சென்றபின்னர் அயலவர்கள் வந்து பொருட்களை அள்ளிக்கொண்டு சென்றுர்கள். பொரளையில் இது நடந்துவிட்டு நுகெகொடையில் இப்படி நடக்கவில்லையென்றுல் ஒரு திட்டமும் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். ஆனுல் எல்லா இடங்களிலும் ஒரேமாதிரியாக விஷயங்கள் நடைபெற்றுள்ளன. அதை வைத்துத்தான் அரசாங்கம் ஒரு முடிவுக்கு வந்தது. இதில் ஒரு திட்டமிருப்பதாக அரசுக்குக் கிடைத்த தகவல்படி கொளுத்தித் தள்ளுங்கள் கொள்ளையடிக்க வேண்டாம் என்பதுதான் கட்டளை. ஆனுல் தெருக்களில் நின்றவர்கள் பார்த்துக் கொண்டு நிற்கவில்லை. அவர்கள் கொள்ளையடிக்கத் தொடங்கினுர்கள். உங்களுக்குத் தெரியும், சந்திகளில் நிற்கும் காடையர்கள், குண்டர்கள் இப்படியான சந்தர்ப்பத்தைத் தவறவிடமாட்டார்கள். அவர்கள் வன்செயல் நடந்ததும் மகிழ்ச்சியடைந்தார்கள். அதன்பின் கொள்ளை அடித்தார்கள்.

மற்ருென்று எல்லோருக்கும் தெரிந்த விஷயம், பெரும்பாலானேர் கவனித்த விஷயம்; கொள்ளையர்கள் அல்லது தீவைக்கவந்தவர்கள் தாக்குதல் நடத்தவேண்டிய வீடுகள், கடைகளின் உரிமையாளரின் பெயர், விலாசங்களைக் கொண்ட பட்டியலைவைத்திருந்தனர். அவர்களுக்கு தேடிக் கண்டுபிடிக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. பட்டியலில் இலக்கத்தைப் பார்த்து நேரில் சென்ருர்கள். அதனுல் இது முன்னரே திட்டமிடப்பட்டிருந்தது என்பது தெரிகிறது.

அரசுக்குக் கிடைத்துள்ள தகவலின்படி, இப்பெயர்களும், விபரங்களும் வாக்காளர் பதிவு இடாப்பிலிருந்தும், தேர்தல் இடாப்பிலிருந்தும் பெறப்பட்டிருக்கிறது. இது முன்கூட்டியே தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

எமக்குக் கிடைத்த தகவல்களின்படி 3 கட்டங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்பட இருந்தது. இதில் 1ம் கட்டம் சிங்கள-தமிழ் மக்களிடையே கலவரம். வடமாகாண பயங்கரவாதிகளின் தேவையற்ற செயல்களினுல் ஏற்பட்ட நிலைமையைச் சாதகமாகப் பாவித்து இதனை மேற்கொள்ளுதல். அடுத்து முஸ்லிம் - சிங்கள மக்களிடையே பிளவைஏற்படுத்துதல். இத்திட்டம் ஒரு பகுதியில் ஆரம்பிக்க முயற்சிகள் செய்யப்பட்டன. நல்லகாலம் அமைச்சர் ஒருவர் அங்கு வந்ததால் நிலைமை சமாளிக்கப்பட்டது. அடுத்தது 3வது கட்டம், சிங்கள மக்களிடையே பிரச்னையை; பிளவை உண்டு பண்ணுதல். சிங்கள பௌத்தர்கள், சிங்கள கிறிஸ்தவர்களிடையே மோதல்களை ஏற்படுத்துதல், மத குருக்களை, தேவாலயங்களை, கோவில்களைத் தாக்குதல், வதந்திகளைப் பரப்புதல், ஆத்திரமூட்டுதல்; இதுவே திட்டம்.

இது நிறைவேறினுல் பொலிசார் மத்தியிலும், இராணுவத்தினர் மத்தியிலும் பிளவு ஏற்படும்என இவர்கள் எதிர்பார்த்தார்கள் இவையெல்லாம் திட்டமிட்டவர்கள் இன்னுமொன்றையும் எதிர்பார்த்தார்கள். அரசின் இராணுவப் பலம் தவிடு பொடியாகும். சமாதானத்தை நிலைநாட்ட முடியாத அரசாங்கம் வீழ்ந்துவிடும் என்று எதிர்பார்த்தார்கள்.

இதுதான் இவர்களின் திட்டம் இதற்கு ஆலோசனை கூறியதுயார்! நாட்டின் சில பல்கலைக்கழக பேராசிரியர்கள். இவர்களுக்கு பக்கதுணையாக இருந்தது சிலவெளிநாட்டு சக்திகள் உள்நாட்டு அரசியல் கட்சிகளின் உதவியுடன் செயல்பட்டனர்.

சிலகட்சிகள் வடபகுதி பயங்கரவாதிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தின. இரகசிய கூட்டங்களை நடத்தினர். ஒருவருக்கொருவர் ஆதரவளிக்க பல திட்டங்களை தீட்டினர். பயங்கரவாதபாதையில் செயல்பட ஒத்துழைத்தனர். இவர்கள் பாதைகள் வெவ்வேருக இருக்கலாம். நோக்கங்கள் ஒன்று பயணங்கள் மாறுபட்டதாக இருக்கலாம். ஆனுல் தான். இலக்கோ ஒன்றுதான்

அடுத்த அம்சம் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டால் நாட்டில் குழப்பம் கொந்தளிப்புஏற்படும் ஈற்றில்உணவுக் கலவரமாகமாறும் இதுதான் அவர்கள் எதிர்பார்த்தது இனப்பாகுபாட்டையும் மத, சாதி, பாகுபாடின்றி மக்கள் உணவு கலவரங்களில் ஈடுபடுவார்கள் என இவர்கள் எதிர்பார்த்தார்கள். இத்திட்டம் நிறைவேறியிருந்தால் நாடே நாசமாகிப் போயிருக்கும். வேலை உணவு, பணம், காணி, வீடு, சுகாதாரம், கல்வி அமைதியான வாழ்க்கை அத்தனையும் அழிந்து போயிருக்கும்.

இலங்கை மீண்டும் பிச்சைப் பாத்திரம் ஏற்க நேர்ந்திருக்கும். எமது மக்கள் தமது நிழலையே கண்டு பயந்து பீதியுடன் வாழும் நிலைமை ஏற்பட்டிருக்கும். நல்ல காலம் பொலிஸாரும், ஆயுதப்படையினரும், அவர்களுடன் சேர்ந்து பெரும்பகுதி மக்களும் இதனை தடுத்துவிட்டார்கள். ஆனுல் ஆபத்து இன்னும் நீங்கிவிடவில்லை. குழப்பத்தை உண்டு பண்ண குழுக்கள் இன்னும் ஆயத்தமாக இருக்கின்றன. கொள்ளையடிக்க கோஷ்டிகள் காத்துக்கொண்டிருக்கின்றன. சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற பாகுபாடு இல்லாது எல்லாரையும் தாக்கியிருப்பார்கள் தேசபக்தியோ அல்லது எதிர்காலத்தைப் பற்றியோ சிந்தனையற்றவர்கள் இவர்கள். அவர்கள் சிந்திப்பதெல்லாம் நாளை எப்படி கொள்ளையடிக்க தொடங்கலாம் என்பதே. குழப்பத்தில் தான் இவர்கள் திளைக்கிருர்கள்.

எல்லாரும் இந்த அபயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள். ஆனுல் இதற்கு பரிகாரமும் அவர்கள் கையிலே தான் இருக்கிறது உங்களை பாதுகாக்க அரசாங்கத்திற்கு உதவும்படி உங்களைக் கேட்டுக் கொள்ள அரசாங்கத்திற்கு உரிமையுண்டு எம்மைப் பாதுகாக்குமாறு அரசாங்கத்தைக்கேட்க உங்களுக்குஉரிமையுண்டு. அரசாங்கமும் மக்களும் நெருங்கியிருக்கவேண்டும் கூட்டாக இயங்கவேண்டும். தனித்து எல்லோரையும் பாதுகாக்கமுடியாது அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்தால், பாதுகாத்துக்கொள்ளுங்கள் என்று கேட்கமுடியாது வீதியில் இறங்கி சண்டையில் ஈடுபடுங்கள்என்று உங்களை நாம் கேட்கவில்லை.

(4-ம் பக்கம் பார்க்க)


ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 1-30, 6-15
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் துணை
(கலர்)

ராஜா (யாழ்நகர்)
10-30, 1-30, 6 00
பாக்கியராஜ்- அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
நடித்த
அந்த 7 நாட்கள்
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-30, 9-30
பிரதாப்— சோபா
மூடுபனி

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்
முரட்டுக் காளை

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-00
(யாழ்ப்பாணம்)
விஜயன் - சத்தியகலா
த னி ம ர ம்

ராணி தினசரி 10-30, 2-30, 6-15 மட்டும்
(யாழ். நகர்)
9-வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

REGAL ரீகல்
10 A. M. ONLY
SHOW ENDS AT 12—30
"GIRL FROM INDIA"

### மணிவாக்கு

''இசைத்தனன் தனது வானிலே இறைவன் யாவையும் நல்ல இவ்வுலகில்''

—ஆங்கிலக் கவிஞர் பிரௌனிங்

# நமது நோக்கு

## அமைதிக்கு உதவுக

பாரதப் பண்பாடே எங்கள் பண்பாடு என்பதை உணராதார் இன்று உணரத் தெய்வம் நல்ல சந்தர்ப்பம் அளித்திருக்கிறது.

துன்பத்தில் படிக்கும் பாடம் இலகுவில் மறக்கப் படுவதில்லை.

பாரதம் ராமாயணம் படியாத மக்கள், படிக்கப் படாத வீடுகள் யாழ்ப்பாணத்தில் எத்தனை என்று புள்ளி விபரங்கள் எடுப்பது அவசியம்.

படைக்கலமிழந்து, எளியராய் எதிர்ப்படும் பகைவரை, அருள்வாய்ந்த அரசர் எக்காலத்திலும் தமது படைக்கலத்தால் நலிவதில்லை.

வெள்ளிமலை எடுத்த இராவணன் படைக்கலமிழந்து, எளியனாய்த் தனக்கு எதிரே போர்க்களத்தில் நிற்கக் கண்ட ராமபிரான், அருள் நிறைந்த ஆண்மையுடன் ராவணனுக்குக் கூறிய கவியரசர் கம்பரின் பாட்டு இன்று எத்தனை தமிழருக்குத் தெரியும்?

''ஆளையா
உனக்கமைந்தன
மாருத மறைந்த
பூளையாயின கண்டனை
இன்றுபோய்ப்
போர்க்கு
நாளை வாவென
நல்கினன்.''

இதுவே பாரதப் பண்பாட்டின் உச்சநிலை. அறநெறி மறநெறியோடு மாறுபடும் பொழுது, இறுதியில் அறமே வெல்லுமென்பது நிச்சயம்.

எங்கள் அழியாப் பொக்கிஷங்களான ராமயணத்தையும் பாரதத்தையும் விட்டு இன்றைய சினிமாப்பாட்டுகளிலும் 'பொப், சங்கீதத்திலும்கொண்டமோகம் எங்கள் இன்றையஅகதி நிலைக்கு பெருங்காரணம்! இதனை விரிக்கிற்பெருகுமென அஞ்சி விடயத்தில் தொடர்வோம்.

அரசியல் எதிரிகள் ஆட்சிதானும் சீர்முறை தவறிப் புன்மையே புரியினும் அவரது அடாது செய்கையைப் பொறுத்து இயன்ற வரையில் பிணக்கைப்பெருக விடாது தடுப்பதே, தடுக்க முயல்வதே அறம் திறம்பாத தலைவர்களின் செயலாகும்.

நாடு முழுவதிலும் இன்று பல்லாயிரக்கணக்கான அகதிகள் முகாம்களில் அடைபட்டிருக்கின்றனர். இவர்களைப் பாதுகாத்து உணவூட்டி இயன்ற சௌகரியங்களை உதவுவது அரசின் பொறுப்பானாலும் அதுமுடியாது; நாட்டின் தொண்டர் ஸ்தாபனங்களே இப்பணியில் முன்னிற்க வேண்டும்; பேரம் பேசும் நேரமல்லஇது.

இன்றைய இனக்குரோத நஞ்சை அகற்றி, மக்கள் விசுவாசத்தைப் பெறும் வகையில், நாட்டின் சர்வோதய இயக்கம், பௌத்த காங்கிரஸ், சென் ஜோன்ஸ் அம்புலனஸ், ரோட்டரி, லயன்ஸ் போன்ற சர்வதேச கழகங்களின் தொடர்பான உதவியை நாம் பெரிதும் மெச்சுகின்றோம்.

சீரழிந்த நிலையிலிருக்கும் நாடு மீண்டும் குணமடைவதற்கு நல்ல அறிகுறிஇது; நாகரிகவாழ்வின் நற்பண்பு.

தீ எவ்வாறு ஆரம்பித்தது, அதற்கு யார் பொறுப்பு, அதன் இன்றைய நிலை அதன் வருங்காலம் — இவை யெல்லாம் நற்பிரஜைகளின் மனத்திலிருந்து தற்காலிகமாகவாவுதல் அகற்றப்பட வேண்டியவை: இவை வதந்தியின் இருப்பிடங்கள். [redacted]

நோயாளிக்குத் தேவையானது தக்க உடனடிச் சிகிச்சையும் அதைத்தொடரும் 'வாட்' வைத்தியமும்.

எனவே டாக்டரில் முழுப் பொறுப்பையும் விட்டுவிடாமல் அவரையும் கைவிடாமல் அவருடையதவறுகளை அவர் நலிவுற்ற நிலையில் ஆராய்ந்து நிலைமையை மோசமாக்காமல்எல்லாவித உதவியையும் அளிக்க உறுதிபூணுவதே இன்றைய முதற்தேவை; எங்கள் பண்பாட்டின் இயற்கைநிலை

துன்பத்தில் தோய்ந்திருக்கும் தமிழ் மக்கள் தேற்றமடைவதற்குத்தக்க தகவல்கள் உண்டு.

கிழக்குமாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டம் எவ்வித குழப்பமுமின்றி அமைதியாக இருக்கிறதென்ற செய்தி மகிழ்ச்சிக்குரியது; சூறவளியால் பாதிக்கப்பட்ட மக்களைத் தெய்வம் மீண்டும் தண்டிக்குமா?

கப்பல்களில் யாழ்ப்பாணம் வந்திறங்கும் அகதிகளை வரவேற்று, அவர்களுக்குரிய வசதிகளை திறமையுடனும் சமத்துவ புத்தியுடனும் ஒருங்கு செய்து வருகிறார் யாழ். அதிபர் திரு தேவநேசன் நேசையா இந்த அவல நிலையில் ஆற்றலும் மதிநுட்பமும் நிறைந்த ஒரு அரச அதிபர், அரசின் நம்பிக்கையையும் இங்குள்ள மக்களின் நல்லெண்ணத்யையும் பெற்றிருப்பதனால் அது யாழ்ப்பாண மக்களின் நல்லதிர்ஷ்டமாகும்.

வேண்டிய ஒத்துழைப்பை விவேகமான முறையில், கோரப்பட்ட பிரகாரம் உதவுவதே நெருக்கடியை இலகுபடுத்தும் வழி.

நாம் ஒரு வெறும் சிறுபான்மை இனமோ, ஒரு மொழி பேசும் கூட்டமோ, நாட்டின் ஒரு பகுதியில் வதியும் மக்கள் கூட்டமோ என்ற மயக்கமான கருத்துக்கள் இவ்வித சோக நிகழ்ச்சிகளில் மறைந்து போக வழிபிறக்கிறது; நாம் ஒரு பழமையான, முதிர்ச்சிபெற்ற, கலாசார பண்பாடுள்ள சமூகமென்ற உணர்வு எங்களுக்கே நினைவுறுத்தப்படுதலோடு நாடனைத்திலும், தமிழ் பேசும் நல்லுலகம் அனைத்திலும், நீதியில் அமைக்கப்பட்டிருக்கும் ஆட்சிகள் கொண்ட அகில உலக நாடுகள் அனைத்திலும் தெரியுமென்பதே எமக்குத்தேற்றமளிக்கும் மிகப்பெரும் தகவல்.

நாடு அமைதியடைய, அரசு தளரவிட்ட சுக்கானை மீண்டும் இறுகப்பிடிக்க கட்டுப்பாட்டுடனும், சமூக உணர்வுடனும் நடந்துகொள்வோமாக!

# பயங்கரவாதம், தீவிரவாதத்தை ஒழித்து நாட்டில் அமைதியை ஏற்படுத்த ஜனாதிபதிக்கு உதவவேண்டும்

## அமைச்சர் 'லலித்' வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டில் தலைதூக்கியுள்ள பயங்கரவாதத்தையும், தீவிரவாதத்தையும் ஒழித்துக்கட்டி நாட்டில் முழு அமைதியை ஏற்படுத்த சகல மக்களும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு உதவ வேண்டும்.

இவ்வாறு வர்த்தககப்பல்த் துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தொலைக் காட்சியிலும் வானொலியிலும் உரையாற்றும்போது கேட்டுக் கொண்டார். திரு. லலித் அத்துலத்முதலி தமதுரையில் மேலும் கூறியதாவது மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட ஜெயவர்த்தன அரசாங்கம் மக்களுக்கு பூரண பாதுகாப்பினை அழிப்பதோடு அவர்கள் விருப்பத்துக்கு ஏற்பவே ஆட்சி நடத்தும் ஆயினும் பல இன மொழிகளைக் இலங்கையில் எல்லாரினும் விருப்பத்துக்கமையவே அரசு செயல்படவேண்டியுள்ளது.

நாட்டில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்கள் திட்ட சக்திகளினால் பரப்பப்பட்ட வதந்திகளினால் உருவானதாகும். இவர்கள் நாட்டில் வன்செயல்களை உண்டு பண்ணி அமைதிக்குபங்கமாக ஏற்படுத்துவனையேநோக்கமாக கொண்டிருந்தார்கள்.

பிரிவினை கோருவது தேசிய ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கும் செயலாகும். யாரும் பிரிவினை பேசாதுஇருப்பதோடு பிரிவினைபற்றி பிரசாரம் செய்யக்கூடாது. எனவே மக்கள் பிரிவினை, தீவிரவாதம் என்பவற்றினை கைவிட்டு தேசிய நலனுக்கு ஒத்துழைக்க முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் வர்த்தகர்களுக்கு பெரும் பங்குஉண்டு. வர்த்தகர்கள் மக்கள் துன்பம்பெறாமல் காக்கும் வல்லமையுடையவர்கள் என்பதினால் வர்த்தகர்கள் பொறுப்புடன் நடந்து மக்களுக்கு போதிய உணவு விநியோகத்தை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

(சூ)

## பெயர்ப்பட்டியலுடன்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

உங்கள் ஆதரவை ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கு கொடுங்கள் அவர் மீது நம்பிக்கை வையுங்கள் அவர்தான் நாட்டின் தலைவர் இந்த நெருக்கடி; இந்த இக்கட்டானநிலை இதிலிருந்து எம்மை மீட்கக்கூடியவர் அவரேதான் மீண்டும் நாட்டில்சமாதானம்ஏற்பட ஒழுங்கு ஏற்பட அவருக்கு உதவுங்கள்.

சுற்றியுள்ளவர்கள் பதட்டப்பட்டு கோபங்கொண்டாலும் நீங்கள் அமைதியாக இருங்கள் நாம்எல்லோரும், ஒரு பயங்கர நிலைமைஊடாக இன்றுசென்று கொண்டிருக்கிறோம். எங்களில் ஒவ்வொருவரைப் பற்றியும் சிந்திக்கிறோம் அவருக்கு என்ன நடந்ததோ இவருக்கு என்ன நேர்ந்ததோ என்று கவலைப்படுகிறோம். இது இயற்கை இந்தநிலையில் ஆத்திரப்படுவதும், சினம்கொள்வதும் சகஜமே பழியை யார் மீதும் சுமத்தமுயல்வது இயற்கையே இந்த இக்கட்டான நேரத்தில் யார் மீதும் குற்றம் கண்டுபிடிக்க முயலாது அதனை நாம் பின்னர் செய்துகொள்ளலாம்.

கண்காணிப்பு குழுக்கள் மூலம் இதனை சாதிக்கலாம். வதந்திகளைப்பரப்பாது நாம் சும்மா இருப்போமானால், இதனை சாதிக்கலாம். பலவதந்திகள் தொலைபேசி மூலம் பரப்பப்படுகின்றன. கேட்டீர்களே விஷயத்தை இப்படி கூறுகிறார் ஒருவர். மிக நம்பிக்கையான நண்பர் இதனை தெரிவித்தார் என்கிறார். இந்த நம்பிக்கையான நண்பர் எங்கிருந்து தகவலைப்பெற்றார், மற்றொரு நம்பிக்கையான நண்பரிடமிருந்து நம்பிக்கையான நண்பர்கள் மட்டும் தமது வாய்களை மூடி வைத்துக்கொண்டிருந்தால் பல அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

உதாரணத்திற்கு இதோ ஒன்று; அண்மையில் வதந்தி ஒன்று பரப்பப்பட்டது. கொழும்பிலுள்ள, உயர்கட்டிடமொன்றிலிருந்து பயங்கரவாதிகள் எமது ஆயுதப்படையினர் மீது சுடுகிறார்கள் என்று ஒரு வதந்தி, ஆனல் அப்படி ஒன்றுமே நடக்கவில்லை. இருந்தாலும் முற்றுமுழுதாக, நம்பக்கூடியதாக கதை கட்டிவிடப்பட்டது; கட்டவிழ்த்துவிடப்பட்டது. மக்கள் நேரில் கண்டதுபோல சம்பவத்தை விவரிக்க ஆரம்பித்தார்கள். சீருடையில் வந்திருக்கிறார்கள் என்றார்கள். இது மட்டுமல்ல 'இன்னுமொரு அருமையான கதையும் கட்டப்பட்டது. அப்படிச் சுட்டவர்களில் சிலர் வெள்ளையர்கள்என்றும் பிறநாட்டிலிருந்து வந்துவிட்டார்கள் என்று கதை பரப்பப்பட்டது. இதற்குசிகரம் வைத்தால் போல் மற்றும் ஒரு கதை. சுட்டுவீழ்த்தப்பட்ட நபர்களில் ஒருவர் வெள்ளையராவர் என்று சொன்னார்கள் கற்பனை எவ்வளவு தூரம்சென்றிருக்கிறது பாருங்கள். ஒரு துளி உண்மைகூட இல்லாதிருந்தும் இதனை வைத்து ஒரு அருமையான கதை புனையப்பட்டது. இதனைத் நீங்கள் அறிந்திருப்பீர்கள். கூரையிலே ஏறிநின்று எமது நாட்டைச் சேர்ந்தவர்கள், சிங்களவர்கள் எமது படையினர்மீது குண்டொன்றை வீசியிருந்தார்கள். படையினர் திருப்பிச் சுட்டார்கள். கூரையில் நின்றவர்கள், சிலர் கொல்லப்பட்டார்கள். பார்த்தீர்களா? நீங்கள் கேள்விப்பட்டதென்ன? நடந்ததென்ன? இப்படித்தான் வதந்தி ஆரம்பித்தது. நீங்கள் கேட்டது விந்தையான கதை, ஒரு பாரதூரமான பயங்கரக் கதை. அதன் விளைவு மக்களிடையே பீதி. உயிரை கையில் பிடித்துக்கொண்டு மக்கள் ஓட ஆரம்பித்தனர். வதந்தி சாதித்த விஷயத்தைப் பார்த்தீர்களா? இதனை நீங்கள் நிறுத்தலாம்.

இப்படி நீங்கள் உதவலாம்.

குண்டர்களுக்கு, கொள்ளையருக்கு உதவிசெய்யாமல் இருங்கள். பயமுறுத்திவரும் அந்த நபருக்கு கருணை காட்டாது பேசாமல் அப்படியே இருந்துவிடுங்கள். ஆகவே நண்பர்களே மக்கள் வெட்கத்திலும் துன்பத்திலும் மூழ்கியிருக்கும் இந்தவேளையில் உங்களைப் பார்த்து நான் கேட்டதெல்லாம் இதுதான். எமது சின்னஞ்சிறியதேசத்தை காப்பாற்ற நம் அனைவரும் ஒன்றுகூடுவோம். எமக்கும் எமது குழந்தைகளுக்கும் மீண்டும் ஒரு சுதந்திர சமுதாயத்தை, எதிர்காலத்தை உண்டுபண்ண உறுதிகொள்வோம்.

(இந்த உரையின் சிலபகுதி நேற்றைய ஈழநாடு இதழில் வெளிவந்திருந்தது.)

(கொழும்பு)

பாடசாலைகள் யாவும் ஆகஸ்ட் விடுமுறைக்காக மூடப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இம்மாதம் 8ம் திகதி ஆரம்பமாக விருந்த க. பொ. த (உயர் தர)பரீட்சைகளும்பின்போடப்பட்டுள்ளது.

இதற்கான திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

(வெ)

### கப்பலில்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அதிபர் திரு. தேவநேசன் நேசையா செய்திருந்தார். மிகப்பத்திரமாக பெண்கள், ஆண்கள் உட்பட இந்த அகதிகள் தொகுதி வந்துசேர்ந்தனர். நூற்றுக்கு மேற்பட்ட கைக் குழந்தைகளுடன் தாய்மார்களே இக்கப்பலில் கூடுதலாக வந்தனர்.

நேற்றுவரை கொழும்பில், 52 ஆயிரம் அகதிகள் 14முகாம்களில் இருந்ததாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

கப்பல்களில் வருவோரை அவரவர் சொந்த இடங்களில் சேர்க்கும் பொறுப்பை யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா ஏற்றிருப்பதால், உறவினர்கள் எவரும் காங்கேசன் துறைமுகத்துக்குச் செல்லவேண்டாமென்று மீண்டும் கேட்கப்பட்டுள்ளனர்.

### மரண அறிவித்தல்

**த. சுப்பிரமணியம் – சு. பரமகுருநாதன்**

V. T. A. அருணாசலம் அன் கோ பசறை - யாழ்ப்பாணம் உரிமையாளரும் மணற்பிட்டி காரைநகரைச் சேர்ந்தவருமான த. சுப்பிரமணியமும் அவரது மகன் பரமகுருநாதனும் பசறையில் அகாலமரணம் அடைந்துவிட்டார்கள்.

சு. குமரகுருநாதன்.

மணற்பிட்டி,
காரைநகர். (8104)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126.